**சுருக்கம்**

உள்ளூர் விடுமுறை – 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் மாமல்லபுரத்தில் நடைபெறுவதை முன்னிட்டு விளையாட்டின் தொடக்க நாளான 28.07.2022 அன்று சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு உள்ளூர் விடுமுறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொது (பல்வகை)த் துறை**

**அரசாணை (வாலாயம்) எண். 2986** **நாள்: 25.07.2022**
**சுபகிருது, ஆடி – 9,**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**

**படிக்க:–**

1. அரசாணை (நிலை) எண்.154, பொது(பல்வகை)த் துறை, நாள். 03.09.2009.
2. அரசு கடித எண்.8585 / பல்வகை / 2013–7, பொது (பல்வகை)த் துறை, நாள். 21.02.2014.
3. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு(S2)த் துறையின் குறிப்பு எண். 3516/S2/2022, நாள். 22.07.2022.

******

**ஆணை:–**

மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ள 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட்டின் தொடக்க நாள் நிகழ்வு 28.07.2022 அன்று நடைபெறுவதை முன்னிட்டு அவ்விளையாட்டில் பங்கேற்கும் வீரர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் வருகையின் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு 28.07.2022 அன்று ஒரு நாள் மட்டும் அரசு அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு உள்ளூர் விடுமுறை அளிக்குமாறு அரசு முதன்மை செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்காணும் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலித்து, மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ள 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட்டின் தொடக்க நாளான 28.07.2022 (வியாழக்கிழமை) அன்று ஒரு நாள் மட்டும் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள அத்தியாவசிய சேவைகள் வழங்கும் அரசுத்துறைகள் தவிர்த்து மற்ற அரசு அலுவலகங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு உள்ளூர் விடுமுறை அளித்து ஆணை வெளியிடப்படுகிறது. மேலும், அவ்விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் 27.08.2022 அன்று (நான்காவது சனிக்கிழமை) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு பணி நாளாக அறிவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

(த.பி.பா.)

3. மேற்கண்ட உள்ளூர் விடுமுறை தினமானது செலாவணி முறிச்சட்டம் 1881 (Under Negotiable Instruments Act, 1881)-ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள கருவூலம், சார்நிலைக் கருவூலகங்களும் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்பட தகுந்த ஏற்பாட்டினை செய்யுமாறு மேற்கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**டி.ஜகந்நாதன்**
**அரசு செயலாளர்**

**பெறுநர்**

அனைத்துத் துறை செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சென்னை/ காஞ்சிபுரம் / திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு.
மாவட்ட கருவூல அலுவலர்கள் சென்னை/ காஞ்சிபுரம்/திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவு, சென்னை-9.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.

**நகல்**

உதிரி/இருப்பு கோப்பு.

**//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//**

ஜெயஸ்ரீ 25/07/2022

**பிரிவு அலுவலர்**

25.07.22